## மகாராஷ்டிராவில் பெண் புலி சுட்டுக் கொலை

# கோவையில் விலங்குகள் நல ஆர்வலர்கள் பேரணி

**கோவை**

மகாராஷ்டிரா மாநிலம் யாவத்மால் வனப்பகுதியில் ‘அவ்னி’ என்று அழைக்கப்பட்ட 6 வயது பெண் புலி, 13 பேரை கொன்றதாக குற்றம்சாட்டப்பட்டது. இதை யடுத்து, கடந்த 2-ம் தேதி இரவு அந்த புலி சுட்டுக்கொல்லப்பட்டது. இதற்கு நாடு முழுவதும் விலங்குகள் நல ஆர்வலர்கள் கடும் கண்டனங்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

அந்த வகையில், வன விலங்கு ஆர்வலர்கள் இணைந்து கோவை மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி முதல் வ.உ.சி. பூங்கா வரை நேற்று மாலை அமைதிப் பேரணி நடத்தினர்.

இதில் கலந்துகொண்ட விலங்குகள் நல ஆர்வலர் மினி வாசுதேவன் கூறும்போது, ‘புலியை உயிருடன் பிடிக்கும் நோக்கில் வனத்துறை செயல்படவில்லை. தனியாருக்கு நிலத்தை தாரை வார்க்கும் நோக்கில் விதிகளை மீறி புலி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளது. பெண் புலி சுட்டுக்கொல்லப்பட்ட தால், அதன் இரு குட்டிகள் திக்கு தெரியாமல் வனப்பகுதிக்குள் அனாதையாக சுற்றி வருகின்றன.

இதுவரை அந்த இரு குட்டி களையும் கண்டறிய முடிய வில்லை. மகாராஷ்டிரா மாநில அரசின் இந்த கொடூர செயலை மக்களுக்கு தெரியப்படுத்தவே பேரணி நடைபெற்றது’ என்றார்.